செ.வெ.எண்: 54 நாள்: 27.08.2021

# நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் இன்று (27.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் இன்று (27.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குறுவைத் தொகுப்பு திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 11,655 விவசாயிகள் 10,950 ஏக்கர் பரப்பு பதிவு செய்துள்ளனர். அதில் 11,414 விவசாயிகளுக்கு 10,730 ஏக்கர் பரப்பிற்கு உரங்கள் 100சத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மை பொறியியல் துறை மூலம் நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, வைக்கோல் கட்டும் கருவி, நெல் அறுவடை இயந்திரம் மற்றும் பண்ணைக் குட்டை அமைத்திடவும் மானியம் வழங்கப்படும். அதற்கான விண்ணப்பத்தை வேளாண் பொறியியல் துறையில் பெற்றுக் கொள்ளலாம்.

நடப்பாண்டில் தென்னைப் பயிர்களில் சொட்டு நீர் பாசனமும் இதர பயிர்களில் தெளிப்பு நீர் பாசனமும் மேற்கொள்ள நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் ரூ.3.83 கோடி மதிப்பீட்டில் 600 ஹெக்டேர் இலக்கு பெறப்பட்டதில் இதுவரை 258.67 ஹெக்டேர் பயனடைந்துள்ளது.

நுண்ணீர் பாசனம் தேவைப்படும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்களை அணுகி உரிய ஆவணங்களை வழங்கி தங்களது பெயரை முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேளாண்மைத்துறை மானியத் திட்டங்கள், பயனாளிகள் முன்பதிவு, பயிர்காப்பீடு, உரம் மற்றும் விதையிருப்பு மற்றும் வேளாண் வாடகை இயந்திர மையங்கள் விபரம், விளைப்பொருட்கள் சந்தை விலை நிலவரம், வானிலை முன் அறிவிப்பு செய்தி, தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்கள் வருகை போன்ற விவரங்களை உடனுக்குடன் அறிந்துக்கொள்ள அனைத்து விவசாயிகளும் உழவன் கைப்பேசி செயலியினை கூகுல் பதிவிறக்க செயலி மூலம் தங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறுவை சாகுபடி பரப்பு நடப்பாண்டில் குறுவை சாகுபடி செய்திட 4,500 ஏக்கர் இலக்கு பெறப்பட்டு இது நாள்வரை 32,800 ஏக்கர் பரப்பு சாகுபடி

மேற்கொள்ளப்பட்டு ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது. இதில் இன்றைய நாள் வரை 2,075 ஏக்கர் அறுவடை நடைபெற்றுள்ளது.

நடப்பாண்டில் சம்பா நெல் சாகுபடி செய்திட 1,57,000 ஏக்கர் இலக்கு பெறப்பட்டு இது நாள்வரை நேரடி விதைப்பாக 3,912 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 29.2 ஏக்கர் நாற்றாங்காளில் நடவு செய்திட தயார்நிலையில் உள்ளது.

சம்பா சாகுபடிக்கு தேவையான நீண்ட கால நெல் இரகங்களான CT 1009 sub-1, ADT-51, CO-50, ADT-46, TRY-3 போன்றவை 506.31 மெ.டண் தற்பொழுது அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 135.2 மெ.டண் நெல்விதைகள் 50சத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது பெய்து வரும் பருவமழையை பயன்படுத்தி விவசாயிகள் சம்பா சாகுபடி செய்திட உழவு மேற்கொள்ளப்படுகிறது.

இரசாயன உரங்கள் யூரியா 932 மெ.டன், டி.ஏ.பி 592.3 மெ.டன், பொட்டாஷ் 347.92 மெ.டன், காம்ப்ளக்ஸ் 953 மெ.டன் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் மற்றும் தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.சா.பன்னீர்செல்வம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.கோ.நடராஜன், முதுநிலை மண்டல மேலாளர் திரு.கே.சண்முகநாதன், நேர்முக உதவியாளர் திரு.சிவகுமார், வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.முருகவேல், விவசாய பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**